**கிண்ணியா நகர சபை - 2022**

--------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிண்ணியா நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | உள்ளுராட்சி திணைக்களம், கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தினால் மீளாய்வாண்டில் அன்பளிப்புச் செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 481,999 ஆன பொருட்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொருட் கணக்கெடுப்புக்கு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்ய வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 21,488,717 பெறுமதியான மூலதனச் செலவுகள் மீண்டெழும் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | மூலதன செலவினங்கள் மற்றும் மீண்டெழும் செலவினங்கள் உரிய முறையில் வகைப்படுத்தபடவேண்டும். |
| இ) | மீளாய்வாண்டில் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 685,745 பெறுமதியான டயர்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்நிதியாண்டில் இத்தவறினை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய செலவினங்கள் உரிய ஆண்டில் சேர்க்கப்படவேண்டும் |
| (ஈ) | கடந்த ஆண்டிருதியில் காணப்பட்ட ஊழியர் கடன் மீதி முன்கொண்டுவரும் போது ரூபா 22,500 குறைத்துகாண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளகிறேன். எதிர்வரும் காலத்தில் சரிசெயயப்படும். | கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| உ) | வருமான செலவுக் கணக்கிலிருந்து திரண்ட நிதி கணக்கிற்கு மாற்றப்பட்ட மிகை ரூபா 3,214,033 ஆன போதும் திரண்ட நிதிக்கணக்கில் ரூபா 15,760,340 தொகையாக காட்டப்பட்டமையால் திரண்ட நிதிக்கணக்கில் மிகையாக ரூபா 12,546,307 தொகை கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| ஊ) | உள்ளூராட்சி சபைகளிற்கான விசேட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ்(LDSP) மீளாய்வாண்டில் நிரமாணிக்கப்பட்ட ரூபா 2,114,483 பெறுமதியில் தங்குமிட விடுதயின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகட்டிடம் எம்மிடம் கையளிக்கப்பட்ட பின்பே இறுதிக்கணக்குகளிற்கு உட்படுத்தப்படும். | -மேற்படி- |
| எ) | சபை நிதியை பயன்படுத்தி மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,123,500 பெறுமதியான சிறுவர் பூங்கா பண்டங்களில் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | தாங்கள் சுட்டிக்காட்டப்பட்டதற்கிணங்க இவ்நிதியாண்டு கணக்கறிக்கையில் புதிய நிரை சேர்க்கப்பட்டு கூட்டிக் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| ஏ) | மீளாய்வாண்டில் புனர்நிர்மாண வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,923,868 ஆன தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் ஜர்னல் குறிப்பு ஊடாக சரி செய்யப்படும். | -மேற்படி- |
| ஐ) | முன்னைய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முத்திரை கட்டணத் தொகையான ரூபா 1,806,583 அவ்வாண்டில் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் அத்தொகையானது திரண்ட நிதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு பெறவேண்டிய முத்திரைக்கட்டண கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். 2023 இற்கான இறுதிக் கணக்கறிக்கையில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது சீர்செய்து தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |
| ஒ) | கடந்த 03 ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 703,893 தொகைக்கு மற்றும் மீளாய்வாண்டு கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கிறேன. 2023 இற்கான இறுதிக் கணக்கறிக்கையில் ஆரம்பக் கணக்கு மீதித் தொகை சமப்படுவதற்கு ஜர்னல் குறிப்பு ஊடாக சரி செய்யப்படும். | -மேற்படி- |
| ஓ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்கான செலுத்தப்பட்ட ஓய்வூதிய பங்களிப்பு ரூபா 187,464 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | அந்நிலுவை சேர்க்கப்படவில்லை. எனவே இனிவரும் காலங்களில் சீர் செய்யப்படும். | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 கணக்குகளில் மீதி மற்றும் | இந்நிதியாண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உரியவாறு இணக்கஞ் செய்ய வேண்டும். |

பட்டோளைகளிக்கிடையில் ரூபா 3,933,820 ஆன வித்தியாசமொன்றானது.

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 198,076,085 பெறுமதியான 09 கணக்கு மீதிகள் நிலையான சொத்துப் பதிவேடு, வீதவரி பதிவேடு, குத்தகை பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு, முத்திரைக் கட்டண மற்றும் நீதிமன்ற தண்டப்பண பதிவேடு, சமர்ப்பிக்காத காரணத்தால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | எதிர்காலத்தில் பதிவேடுகளை சரிசெய்யப்படும். | பதிவெடுகள் நாளாதுவரையாக்கி பேணப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்
### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 1646 | சபையின் பாவனையிலுள்ள 33 வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு என்பவற்றின் மூலப்பிரதிகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாண்டில் உரியவாறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | | | |
| i) | 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றிக்கை. | மீளாய்வாண்டில் விரலடையாள இயந்திரப் பாவனை நடைமுறையில் இல்லாமல் மேலதிக நேர மற்றும் விடுமுறைதினக்கொடுப்பன வாக ரூபா 1,054,876 | இவ் நிதியாணடில் புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டு கைவிரல் அடையாளம் பெற நடவடிக்கை | உரிய சுற்றறிக்கையிற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படும். | |
| **ii)** | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | நகரசபை பாவனையிலுள்ள 33 வாகனங்கள் அனைத்தும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பின்னர் எரிபொருள் பரிசோதனை செய்வதற்காக நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்படும் | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவினம் ரூபா 11,674,683 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 5,021,055 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை, வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்** |
| | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” |
| வீதவரியும் வரியும் | 4,911 | 4,911 | 2,510 | 7,695 | 4,911 | 4,911 | 1,544 | 5,294 |
| வாடகை | 20,345 | 12,659 | 3,063 | 45,911 | 19,196 | 19,196 | 3,003 | 36,315 |
| உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,675 | 1,675 | 1,675 | -- | 1,363 | 1,363 | 1,363 | -- |
| ஏனையவை | 4,200 | 4,200 | 1,029 | 9,647 | 7,095 | 7,095 | 618 | 6,476 |
| | **31,131** | **23,445** | **8,277** | **63,253** | **32,565** | **32,565** | **6,528** | **48,085** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **அ)** | **வீதவரி மற்றும் வரி** | | |
| i) | மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய ரூபா 10,205,311 மொத்த தொகையில் ஆண்டின் இறுதியில் நிலுவையாக ரூபா 7,694,359 தொகை காணப்படுகின்றது. | நகர சபையில் பணிபுரிகின்ற அமைய ஊழியர்களைக் கொண்டு நேரடி களவிஜயத்தின் மூலம் கடந்தகால நிலுவை, மற்றும் இவ்வாண்டிற்கான அறவீடுகளும் சேர்த்து தற்போது அறவிடப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் வருமானம் சேகரிக்க வேண்டும். |
| ii) | கிண்ணியா பிரதான வீதியில் 65 கடையறைகள் காணப்படுகின்ற போதிலும் இவை அனைத்துக்கும் 10 ஆண்டகளை விட பழைமையான ஆதன மதிப்பீட்டின் மீது வருமானம் கணக்கிடப்படுவது மற்றும் காலத்திற்கேற்ப மீள்மதிப்பீடு செய்யப் படாததினால் அதிகூடிய தொகை வருமானம் இழக்கப்பட்டிருந்து. | இது வரை விலைமதிப்பீட்டு திணைக்ளத்தின அறிக்கை கிடைக்காததனால் மீள்மதிப்பீடொன்று மேற்கொள்ள முடியாதுள்ளது. | மதிப்பீடு துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **ஆ)** | **வாடகை** | | |
| i) | நகர சபையினால் பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள் வருடாந்தம் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் மீளாய்வாண்டில் கிடைக்க வெண்டிய வாடகை ரூபா 45,910,123 ஆனது. | COVID 19, பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக வருமானம் அறவிடுவது சிக்கல் நிலை ஏற்பட்டது. இருப்பினும் பொதுச் சந்தைக்கான 2022 ஆம் ஆண்டு எவ்வித நிலுவையும் இல்லாமல் அறவீடு செய்யப்படும். | உடன்படிக்கை பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீன்சந்தைநிலுவை வாடகை ரூபா 7,595,000 ஆனது. | நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு தீர்மாகிகப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| **(இ)** | **முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதிச் செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய முத்ரைக் கட்டணம் ரூபா 5,897,150 ஆனது. | உரிய காலத்தில் நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக்கட்டணம் சபையினால் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையின் பராமரிப்பில் காணப்படுகின்ற 08 வாகனங்களின் அனுமதிப்பத்திரம் உரிய காலத்தில் புதுப்பிக்க தவறியதனால் ரூபா 23,960 நிலுவை மற்றும் தண்டப்பணமாக சபை நிதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் சிலவாகனங்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் அவைகளை திருத்திய பின்பே வாகன அனுமதிப பத்திரம் பெறப்பட்டது. தற்போது உரிய காலத்திற்குள் அனுமதி பெறப்படுகின்றது. | உரிய காலத்தில் வாகனங்களின் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| குறித்த மாதத்திற்குரிய ஊழியர் நம்பிக்கை நிதிய கட்டணத்தினை செலுத்தத் தவறியமையின் காரணமாக 2021 யூலை முதல் 2022 சனவாரி வரையிலான காலப்பகுதியில் ரூபா 11,624 ஆன தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது அந்தந்த மாதத்திற்கு சம்பளக் கொடுப்பனவினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்டத்திற்கேற்ப உரிய காலத்தில் கொடுப்பணவுகள் மேற்கொள்ளப்பட்டு தண்டப்பணம் செலுதத‌ப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**அ) உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **அ) உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்** | | |
| சபையின் பெயரில் உரிமை மாற்றப்படாத 13 வாகனங்கள் காணப்படுகின்றன. | சபைக்கு உரிமைமாற்றம் செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | வாகனங்கள் உரிமைமாற்றம் செய்யப்படல் வேண்டும். |
| **ஆ) பயன்படுத்தப்படாத சொத்துக்கள்** | | |
| சபையின் சேதனப்பசளை தயாரிப்பு நிலையத்திற்கு உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதார செயற்திட்டம் (LDSP) ஊடாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 850,000 தொகையான compost crusher இயந்திரம் ஒரு வருடகாலமாக பாவனையற்றுக் காணப்படுகின்றது. | எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | உரிய நோக்கத்தினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |